**செய்தி வெளியீடு எண்: 172** **நாள்: 08.03.2018**

# செய்தி வெளியீடு
# லூம்வேர்ல்டு வணிகச்சின்னம் மாற்றுதல்

மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கைத்தறி துணி ரகங்களை விற்பனை செய்வதற்கு உதவிபுரியும் வகையில் **"லூம்வேர்ல்டு"** என்ற வணிகப்பெயரில் சிறப்பு வகை விற்பனை நிலையங்கள் 2000ம் ஆண்டு தமிழக அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறையினால் துவக்கப்பட்டன. இந்திய அரசின் வணிகக்குறிகள் சட்டம் 1999ன் கீழ் இது ஒரு தனி நிறுவனமாக மார்ச் மாதம் 2008ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. தமிழக அரசால் ஒரே வணிகப்பெயரில் கைத்தறி துணி இரகங்களை விற்பனை செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன் சென்னை அண்ணாநகர் மற்றும் எழும்பூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் துணிவகைகளின் விற்பனையினை மேம்படுத்தவும், நெசவாளர்களின் வாழ்வாதாரத்திற்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கவும் **"லூம்வேர்ல்டு"** செயல்பட்டு வருகின்றன.

**லூம்வேர்ல்டு–ன் தற்போதைய வணிகச்சின்னம்**

**"லூம்வேர்ல்டு"** விற்பனை நிலையங்களின் வணிகச்சின்னத்தை அனைத்து மக்களாலும் எளிதில் மிகவும் கவரக்கூடிய வகையில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, **"லூம்வேர்ல்டு"** வணிகச்சின்னத்தை மாற்றியமைக்க பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் சிறப்புப் பதிவுகள் வரவேற்கப்படுகின்றன. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வணிகச்சின்னம் எளிமையானதாகவும், நினைவில் வைக்கத்தக்கதாகவும், காலக்கணிப்பற்ற, பலதுறைசார்புடைய, பொருத்தமான, கண்கவரும் விதத்தில் இருக்கவேண்டும். மேற்படி வணிகச்சின்னம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களையும், நெசவாளர்களையும் பிரதிபளிக்கும் வகையில் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மிகவும் சிறந்த பதிவுகளுக்கு **முதல் பரிசுத்தொகையாக ரூ.10,000/–ம், இரண்டாம் பரிசுத் தொகையாக ரூ.5000/–ம் வழங்கப்படும்.** மேலும், வணிகச்சின்னம், ஏற்கனவே வழக்கத்தில் இருந்துவருவதாகவோ அல்லது மற்ற வணிகச்சின்னத்தின் பிரதியாகவோ இல்லாமல் புதுமையாக இருத்தல் வேண்டும். லூம்வேர்ல்டு குறித்த மேற்கொண்டு விபரங்கள் அறிய லூம்வேர்ல்டு இணையதளம் www.https:/loomworld.in ன் மூலம் தெரிந்துகொள்ளலாம். ஆலோசனைகள் / பதிவுகளை பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

**"லூம்வேர்ல்டு வணிகச்சின்னம் மாற்றுதல்"**
**கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்**
**குறளகம் , 2ம் தளம், சென்னை–600 108.**

ஆலோசனைகள் / பதிவுகள் பெற கடைசி தேதி : 31.03.2018

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**